**ஜூலை – 24**

# TNPSC துளிகள்

- மூத்த கல்வெட்டியல் அறிஞர் S. ராஜகோபாலை மிகவும் சிறப்பிற்கும் வகையில், திசையாயிரம் என்ற நினைவு புத்தகத்தை தமிழக நிதியமைச்சர் வெளியிட்டார்.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆனைமலை புலிகள் காப்பகத்தில் (ATR) இந்தியாவின் முதல் இருவாச்சி வளங்காப்புக்கான சிறப்பு மையம் நிறுவப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- 4 நாட்கள் நடைபெறும் “2025 ஆம் ஆண்டிற்கான சாரல் விழா” தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தொடங்கப்பட்டது.
- கோவையில் உள்ள ICAR-கரும்பு உற்பத்தி நிறுவனத்தின் அறிவியலார்கள் குழுவிற்கு ‘வேளாண்மை மற்றும் தொடர்புடைய அறிவியலில் புதுமை மற்றும் தொழில்நுட்பம்’ என்ற பிரிவின் கீழ் ‘2025 ஆம் ஆண்டிற்கான ராஷ்ட்ரிய கிருஷி விஞ்ஞான புரஸ்கார்’ விருது வழங்கப்பட்டது.
- சென்னை உயர் நீதிமன்றத்தின் 54வது தலைமை நீதிபதியாக நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா பதவியேற்றார்.
- நம்பிக்கை செழித்து வளரக் கூடிய சூழல்களை உருவாகுவதற்கும், பகிரப்பட்ட மனித குலத்தை வளர்ப்பதற்கும் வேண்டி ஒரு உலகளாவிய அழைப்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது (UNGA) ஜூலை 12 ஆம் தேதியை சர்வதேச நம்பிக்கை தினமாக அனுசரிக்கிறது.
- மணல் மற்றும் புழுதிப் புயல்களின் பெருமளவு எதிர்மறை தாக்கங்களானது பல்வேறு அளவுகளில் சர்வதேச அளவிலான முக்கியப் பிரச்சினைகள் என்பதை அங்கீகரிக்கும் வகையில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஜூலை 12 ஆம் தேதியை மணல் மற்றும் தூசிப் புயல்களை எதிர்கொள்வதற்கான சர்வதேச தினமாகக் கடைப்பிடிக்கிறது.

# தமிழ்நாடு செய்திகள்


## தமிழ்நாட்டில் பயிர் கடன்கள்

- கடந்த நான்கு ஆண்டுகளில் கூட்டுறவுத் துறை மூலம் தமிழ்நாடு மாநிலம் முழுவதும் 66.24 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளுக்கு ₹53,340 கோடி பயிர் கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.
- சுமார் 11.70 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பயனடையும் வகையில் ₹4,904 கோடி மதிப்புள்ள நகைக் கடன்களையும் இது தள்ளுபடி செய்துள்ளது.
- 1.01 லட்சத்திற்கும் அதிகமான சுய உதவிக் குழுக்களுக்கு ₹2,118.80 கோடி மதிப்புள்ள சுய உதவிக் குழு (SHG) கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.
- கால்நடை மேம்பாட்டிற்காக 11.88 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் ₹6,372 கோடி கடன்களைப் பெற்றுள்ளனர்.
- 47,221 மாற்றுத் திறனாளிகளுக்கு மொத்தம் ₹225.94 கோடி கடன்கள் வழங்கப்பட்டு உள்ளன.
- சுமார் 16,500 பணிக்குச் செல்லும் பெண்கள் ₹470 கோடி மதிப்புள்ள கடன்களைப் பெற்றுள்ளனர்.
- 49,000க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோருக்கு சுமார் ₹283.27 கோடி கடன்கள் வழங்கப் பட்டன.

- அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடித் திட்டத்தின் கீழ், சுமார் 86 துப்புரவுத் தொழிலாளர்கள் தொழில்முனைவோராக மாற ₹52.34 கோடி கடன்களைப் பெற்றனர்.
- இதுவரையில் 4,494 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு மொத்தம் ₹18.80 கோடி கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.




## இளையபெருமாள் சிலை




- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் (TNCC) முன்னாள் தலைவரும், பட்டியல் இனத்தைச் சேர்ந்த முக்கிய தலைவருமான எல். இளையபெருமாளின் நினைவு மண்டபம் மற்றும் சிலையைச் சிதம்பரத்தில் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- எல். இளையபெருமாள் தலைமையிலான தீண்டாமை, பட்டியல் சாதியினரின் பொருளாதார மற்றும் கல்வி மேம்பாடு குறித்த குழுவின் பரிந்துரைகள், 1970 ஆம்

ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு இந்து அறநிலையத் துறைச் சட்டத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான அடிப்படையாக அமைந்தது.

- சுதந்திர இந்தியாவில் முதன்முதலாக எட்டு பேர் கொண்ட ஒரு குழுவின் தலைவராக 1965 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டபோது இளையபெருமாள் வெறும் 41 வயதுடையவராக இருந்தார்.
- இந்தக் குழு இந்தியா முழுவதும் பயணம் செய்து 1969 ஆம் ஆண்டில் அதன் விரிவான முடிவுகளைச் சமர்ப்பித்தது.
- இருப்பினும், அதன் பரிந்துரைகளை ஒன்றிய அரசு இதுவரை செயல்படுத்தவில்லை.
- கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்திற்கு அருகிலுள்ள தெம்மூரில் 1924 ஆம் ஆண்டு ஜூன் 26 அன்று அவர் பிறந்தார்.
- 1952 ஆம் ஆண்டு நாட்டின் முதல் தேர்தலில் அவருக்கு 27 வயதே ஆகி இருந்த நிலையில் அவர் சிதம்பரம் (தனி) தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஆனார்.
- 1998 ஆம் ஆண்டு திமுக அரசால் நிறுவப்பட்ட அண்ணல் அம்பேத்கர் விருதைப் பெற்ற முதல் நபர் இளையபெருமாள் ஆவார்.
- அவர் 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 அன்று காலமானார்.

## உங்களுடன் ஸ்டாலின் திட்டம் (USS) மற்றும் அம்மா திட்டம்

| AMMA Rural Infrastructure Developmet | Ungaludan Stalin Scheme |
|---|---|
| Launched: 2013 | Launched: 2021 |
| By J. Jayalalitha (AIADMK Government) | By M.K. Stalin (DMK Government) |
| Objective: Provide basic infrastructure such roads, drinking water, streetlights, community halls, and underserved villages | Objective: Directly receive and address public grievances by enabling people to interact with Chief Minister or district administration |

- பொதுமக்களின் உண்மையான குறைகளை மனு அளித்த நாளிலிருந்து 45 நாட்களுக்குள் நிவர்த்தி செய்வதற்காக, ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள அனைத்து முக்கிய அரசுத் துறைகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதற்காக உங்களுடன் ஸ்டாலின் திட்டம் (USS) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் உள்ள விளிம்பு நிலை மக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட அதிகபட்ச சேவை (AMMA) என்ற திட்டத்தினை போன்றே உங்களுடன் ஸ்டாலின் திட்டம் (USS) தொடங்கப்பட்டு உள்ளது.
- ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது முந்தைய AIADMK அரசாங்கத்தால் AMMA திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- இந்த இரண்டு திட்டங்களும் மக்களின் வீட்டு வாசலிற்கே சென்று அரசுச் சேவைகளை வழங்குதல் என்ற பொதுவான ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளன
- மக்களின் குறைகளைத் தீர்ப்பதைத் தவிர, இந்த இரண்டு திட்டங்களும் பல்வேறு திட்டங்களின் கீழ் புதிய பயனாளிகளைச் சேர்ப்பதற்கும் வழி வகுக்கின்றன.
- 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் (AMMA திட்டத்தில்) மற்றும் 2025 ஆம் ஆண்டு ஜூன்

மாதத்தில் (USS திட்டத்தில்) வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவுகளின் ஆய்வுப் படி, இந்த இரண்டு திட்டங்களும் நோக்கத்தில் வேறுபடுகின்றன.

- இரண்டு திட்டங்களுக்கும் இடையிலான முக்கிய வேறுபாடு என்னவென்றால், AMMA திட்டம் கிராமப்புறங்களில் உள்ளவர்களை மட்டுமே கவனித்துக் கொண்டாலும், USS திட்டம் நகர்ப்புறங்களில் உள்ள மக்களையும் உள்ளடக்கும்.
- பொதுத் துறை (முதல்வரின் முகவரி) வெளியிட்ட அரசாணையின்படி, அடுத்த நான்கு மாதங்களில் (நவம்பர் வரை) மொத்தம் 10,000 முகாம்கள் நடத்தப் படும்.
- இதில் நகர்ப்புறங்களில், 3,768 முகாம்களும், கிராமப்புறங்களில், 6,232 முகாம்களும் நடத்தப்படும்.
- மாவட்டங்களில், சேலம் மாவட்டத்தில் அதிகபட்சமாக 432 முகாம்களும், அதைத் தொடர்ந்து சென்னை (400) மற்றும் திருவள்ளூர் (389) ஆகிய மாவட்டங்களில் இந்த முகாம்களும் நடத்தப்பட உள்ளன.
- தற்போதைய அரசாங்கத்தின் சமீபத்திய முயற்சியானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நகர்ப்புறங்களில் தொடங்கப்பட்டு படிப்படியாக மீதமுள்ள பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்ட மக்கள் முதல்வரின் மேம்படுத்தப்பட்ட பதிப்பாகும்.
- USS திட்டம் "வீடு வீடாகச் சென்று பிரச்சாரம்" என்ற நோக்கத்துடன் தொடங்கப் பட்டது.
- உங்களைத் தேடி உங்கள் ஊரில் என்பது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்ட அரசாங்கத்தின் மற்றொரு மக்கள் தொடர்புத் திட்டமாகும்.
- இங்கு ஆட்சியர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட தாலுகாவில் 24 மணி நேரம் தங்கி அங்கு கள ஆய்வுகளை மேற்கொள்வார்கள் என்பதோடு பொதுமக்களுடன் உரையாடி, அரசுத் திட்டங்கள் குறித்த கருத்துகளையும் பெறுவார்கள்.
- 2021 ஆம் ஆண்டில் முதல்வரின் முகவரி திட்டம் தொடங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## துணைக் குடியரசுத் தலைவர் தன்கர் பதவி விலகல்


- துணைக் குடியரசுத் தலைவர் ஜக்தீப் தன்கரின் பதவி விலகல் என்பது, இடைக்கால காலியிடத்தைத் ஏற்படுத்தியுள்ளது என்பது, இது இந்திய வரலாற்றில் இதே போன்ற மூன்றாவது நிகழ்வாகும்.
- முன்னதாக வி.வி. கிரி மற்றும் ஆர். வெங்கடராமன் ஆகியோர் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக பதவி விலகினர்.
- அவர்களுக்குப் பிறகு முறையே கோபால் ஸ்வரூப் பதக் மற்றும் சங்கர் தயாள் சர்மா ஆகியோர் பதவியேற்றனர்.
- அரசியலமைப்புச் சட்டமானது தற்காலிக துணைக் குடியரசுத் தலைவர் என்ற பதவியை ஏற்படுத்தப்படவில்லை.
- இருப்பினும், துணைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவையின் அதிகாரப் பூர்வத் தலைவராகவும் இருப்பதால், அவை துணைத் தலைவர் அவர் இல்லாத நேரத்தில் மாநிலங்களவைக்குத் தலைமை தாங்குவார்.
- குடியரசுத் தலைவர் பதவியைப் பொறுத்தவரையில், அரசியலமைப்புச் சட்டம் ஆறு மாதங்களுக்குள் காலியிடத்தை நிரப்ப வேண்டும் என்று கோருகிறது.
- ஆனால் துணைக் குடியரசுத் தலைவர் காலியிடத்திற்கு, அத்தகைய குறிப்பிட்ட காலக் கெடு எதுவும் இல்லை.

- அப்பதவி காலியான பிறகு தேர்தல் "முடிந்தவரை விரைவில்" நடத்தப்பட வேண்டும் என்பதை மட்டுமே கூறுகிறது.
- தேர்தல் ஆணையம் அதற்குரிய தேர்தல் தேதியை அறிவிக்கும்.
- இந்தத் தேர்தல் 1952 ஆம் ஆண்டின் குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல் சட்டத்தின் கீழ் நடத்தப்படுகிறது.
- மரபுப் படி, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஏதேனும் ஒரு பொதுச் செயலாளர் சுழற்சி முறையில் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்படுகிறார்.
- புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் தன்கரின் மீதமுள்ள பதவிக்காலம் மட்டுமல்லாமல், தான் பதவியேற்ற நாளிலிருந்து ஒரு முழுமையான ஐந்து ஆண்டு காலத்திற்கும் பதவி வகிப்பார்.




# சர்வதேசச் செய்திகள்

## பிரம்மபுத்திரா நதியின் மீது உலகின் மிகப்பெரிய அணை




- சீனா திபெத்தில் உள்ள யார்லுங் சாங்போ நதியில் ஒரு மிகப்பெரும் அணையைக்

கட்டத் தொடங்கியுள்ளது.

- இது கட்டி முடிக்கப்படும்போது உலகின் மிகப்பெரிய நீர்மின்சார ஆதாரமாக மாறும்.
- இந்த நிலையங்கள் ஆண்டுதோறும் சுமார் 300 பில்லியன் கிலோவாட்-மணி நேர மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- யார்லுங் சாங்போ உலகின் மிக உயரமான நதியாகும் என்பதோடு இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 5,000 மீட்டர் (16,404 அடி) உயரத்தைக் கொண்டுள்ளதோடு இது திபெத்தியர்களின் புனித நதியாகவும் கருதப்படுகிறது.


## உலகின் முதல் திட்டமிடப்பட்ட இடம்பெயர்வு - துவாலு

- பசிபிக் தீவில் வசிப்பவர்களுக்கு வழங்கும் முதல் வகையான இடம்பெயர்வு நுழைவு இசைவிற்கு 5,000க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்.
- அதன் விதிமுறைகளின் கீழ், 2025 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 280 துவாலுவாசிகள் ஒரு வகை தேர்ந்தெடுப்பு முறை மூலம் ஆஸ்திரேலியாவுக்கு இடம் பெயரலாம்.
- இது உலகின் முதல் திட்டமிடப்பட்ட இடம்பெயர்வு ஆகும் என்பதோடு இது துவாலுவில் வசிப்பவர்களுக்கு வாழ்வதற்கான உரிமையை வழங்குகிறது.
- துவாலு நாடானது தெற்கு பசிபிக் பெருங்கடலில் ஆஸ்திரேலியாவிற்கும், ஹவாய்க்கும் இடையில் அமைந்துள்ளது.
- இந்த நாடானது பவளப்பாறைகளால் சூழப்பட்ட வளைய வடிவ தீவுகளைக் கொண்ட ஒன்பது தாழ்வான பவளத்தீவுகளை/அடோல்களைக் கொண்டுள்ளது.
- துவாலுவின் மிக உயரமான இடம் கடல் மட்டத்திலிருந்து 15 அடி (4.5 மீட்டர்) உயரத்தில் உள்ளது, ஆனால் நாட்டின் சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து 6 அடி (2 மீ) மட்டுமே.
- அந்த நாட்டின் பெரும்பாலான நிலம் மற்றும் முக்கிய உள்கட்டமைப்பு 2050 ஆம் ஆண்டுக்குள் உயர் அலை மட்டத்திற்கும் கீழே செல்லக் கூடும்.
- இது பருவநிலை மாற்றம் காரணமாக கடல் மட்ட உயர்வு, வெள்ளம் மற்றும் புயல் அலைகளுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதாக மாற்றுகிறது.




## நிகரப் பூஜ்ஜிய வங்கிக் கூட்டணி (NZBA) - HSBC

- HSBC (ஹாங்காங் மற்றும் ஷாங்காய் வங்கி நிறுவனம்) உலகின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றாகும் மற்றும் நிகர பூஜ்ஜிய வங்கிக் கூட்டணியின் (NZBA) நிறுவன உறுப்பினராகும்.
- 2050 ஆம் ஆண்டுக்குள் நிகரப் பூஜ்ஜிய பசுமை இல்ல வாயு உமிழ்வுடன் அத்துறையின் செயல்பாடுகளைச் சீரமைக்க உறுதி பூண்டுள்ள கூட்டணியிலிருந்து விலகிய முதல் இங்கிலாந்து கடன் வழங்குநராக இது மாறியுள்ளது.
- இருப்பினும், 2050 ஆம் ஆண்டுக்குள் நிகரப் பூஜ்ஜிய இலக்கை அடைய HSBC தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது.
- இந்த முடிவானது முக்கிய அமெரிக்க மற்றும் கனடா நாட்டு வங்கிகளின் சமீபத்திய வெளியேற்றத்தினைத் தொடர்ந்து எடுக்கப்படுள்ளது.
- NZBA 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட நிதி முன்னெடுப்பின் கீழ் தொடங்கப்பட்டது.




## உலகளாவிய தட்டம்மை அதிகரிப்பு 2025



- உலகளவிலும் அமெரிக்காவிலும் தட்டம்மை நோயாளிகளின் மிக ஆபத்தான மற்றும் கடுமையான மீள் எழுச்சி குறித்து அறிவியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
- கடந்த 30 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மிகவும் அதிகமான எண்ணிக்கையிலான பாதிப்புகளை அமெரிக்கா சமீபத்தில் கொண்டுள்ளது.
- தடுப்பூசி விகிதங்கள் குறைந்து வருவதால் இந்த மீள் எழுச்சி ஏற்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் வெறும் 10,000 ஆக இருந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 10.3 மில்லியனுக்கும் அதிகமான பாதிப்புகள் பதிவாகியுள்ளதாக WHO குறிப்பிட்டது.
- ஒட்டுமொத்தப் பெருந்தொற்றுகளில் கிட்டத்தட்ட பாதியளவு ஆப்பிரிக்காவில் காணப் பட்டன.
- ஐரோப்பா கண்டத்தில் உள்ள 53 நாடுகளில் சுமார் 41 நாடுகள் உறுதிப்படுத்தப்பட்ட தட்டம்மை பாதிப்புகளைப் பதிவு செய்துள்ளன.
- தட்டம்மை என்பது மிகவும் தொற்றக் கூடிய மற்றும் கடுமையான காற்றில் பரவும் ஒரு நோயாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வெப்பமண்டல பன்முகத் தன்மையில் ஊடுருவல்/அயலக தாவர இனங்கள்




- 1950களில் இருந்து, ஊடுருவல்/அயலக தாவர இனங்களின் பரவல் மிக அதிவேகமாக அதிகரித்தது.
- தற்போது, குறைந்தது நான்கு சதவீத அளவில்- சற்றேறக் குறைய 13,939 முதல் 18,543 இனங்கள் அவற்றின் உயிரியல் புவியியல் எல்லைகளுக்கு வெளியே குடியேறியுள்ளன.
- Greater Tropics மண்டலத்தில் சுமார் 9,831 ஊடுருவிய ஊடுருவல்/அயலகத் தாவரங்கள் உள்ளன.

- வெப்ப மண்டலங்கள் மற்றும் துணை வெப்ப மண்டலங்கள், கூட்டாக Greater Tropics என்று அழைக்கப்படுகின்றன.
- 2050 ஆம் ஆண்டளவில், தென் அமெரிக்கா முழுவதும் ஊடுருவல் தாவர இனங்களின் பரவல் தோராயமாக 21 சதவீதம் (669 இனங்கள்), ஆப்பிரிக்கா முழுவதும் 12 சதவீதம் (503 இனங்கள்) மற்றும் ஆசியாவின் வெப்ப மண்டலப் பகுதிகளில் 10 சதவீதம் (227 இனங்கள்) என்ற அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.


# முக்கிய தினங்கள்

## 1995 ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையின் நினைவு தினம் 2025 - ஜூலை 11

- ஜூலை 1995 ஆம் ஆண்டில், போஸ்னிய செர்பிய இராணுவம் ஸ்ரெப்ரெனிகாவை முற்றுகையிட்டு அங்கு ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கொடூரமாகக் கொன்றது.
- யூத இனப் படுகொலைக்குப் பிறகு ஐரோப்பாவில் நடந்த மிகப்பெரிய படுகொலை இதுவாகும்.
- மே 2024 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை அங்கீகரித்தது.
- 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு 'Remember Yesterday, Act Today'.




## சர்வதேச மலாலா தினம் 2025 - ஜூலை 12




- இந்த தினம் பாகிஸ்தானின் பெண் கல்விக்கான மிகவும் முக்கிய ஆர்வலரான மலாலா யூசப்சாயை கௌரவிக்கிறது.
- பெண்கள் கல்வி குறித்த அவரது நிலைப்பாட்டிற்காக 2012 ஆம் ஆண்டில் தலிபான்கள் இளவயதில் மலாலாவை சுட்டனர்.
- அவர் உயிர் பிழைத்து, இப்போது பெண்கள் கல்விக்கான ஒரு உலகளாவியத் தூதராக உள்ளார்.

- இவர் 2014 ஆம் ஆண்டு தமது 17 வயதில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்று வரலாற்றில் இளம் வயதில் இப்பரிசை வென்றவரானார்.
- இந்தியாவைச் சேர்ந்த குழந்தைகள் உரிமை ஆர்வலரான கைலாஷ் சத்யார்த்தியுடன் இணைந்து நோபல் பரிசினைப் பகிர்ந்து கொண்டார்.


## உலக இளைஞர் திறன்கள் தினம் 2025 - ஜூலை 15

வேலையின்மை மற்றும் திறன் சார்ந்த வேலையின்மை மீதான சவால்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு முக்கியப் பாதையாக இன்றைய இளைஞர்களுக்கு சிறந்த சமூக-பொருளாதார நிலைமைகளை அடைவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு உலக இளைஞர் திறன்கள் தினத்தின் (WYSD) 10வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

தொழிலாளர் சந்தையில் வெற்றி பெற போதுமான திறன்கள் இல்லாததால் சுமார் 450 மில்லியன் இளைஞர்கள் (10 பேரில் 7 பேர்) பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ளனர்.

2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Youth empowerment through AI and digital skills".





# இதரச் செய்திகள்

## இந்தியாவின் ஐ.நா. வாக்களிப்பு தரவுகள் 2025

- 1946 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஐக்கிய நாடுகள் சபையில் 5,500 க்கும் மேற்பட்ட வெவ்வேறு தீர்மானங்களுக்கு இந்தியா வாக்களித்தது.
- சமீபத்தியத் தரவுகளின்படி, இந்தியாவின் வருடாந்திர 'ஆதரவு/ஆம்' எனும் வாக்குகள் சதவீதம் 56% ஆகக் குறைந்துள்ளது என்பதோடு இது 1955 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகக் குறைவாகும்.
- மறுபுறம், அதன் புறக்கணிப்பின் வருடாந்திர சதவீதமானது 44% ஆக அதிகரித்துள்ளது என்ற நிலையில் இது ஐ.நா.வில் இந்தியாவின் வரலாற்றில் மிக உயர்ந்த அளவாகும்.
- வாக்களிப்பு முறைகளில் ஏற்பட்ட இந்த மாற்றம் ஆனது 2019 ஆம் ஆண்டு வாக்களிப்பு முறைகளில் தொடங்கியது என்பதையும் தரவு எடுத்துக் காட்டுகிறது.
- இந்தக் காலக் கட்டத்தில் வருடாந்திர ஆதரவு வாக்குகளின் சதவீதம் 20% முதல் 100%

வரை உள்ள சதவீதங்களுக்கு இடையில் உள்ளது.

- இந்தக் காலக் கட்டத்தில் புறக்கணிப்பின் சதவீதமும் 0% முதல் 40% வரை ஏற்ற இறக்கமாக இருந்தது.
- 1990களின் இடைப்பகுதிக்கும் 2019 ஆம் ஆண்டிற்கும் இடையில், ஆதரவு வாக்குகளின் பங்கு சுமார் 75% முதல் 83% வரையிலான அளவில் ஐ.நா.வில் இந்தியாவின் வாக்களிப்பு முறைகள் நிலையானதாக இருந்தது.
- புறக்கணிப்பின் பங்கு 10% முதல் 17% வரை இருந்தது.




## 9 காரட் தங்க நகை - கட்டாய ஹால்மார்க் தரக்குறியீடு

- இந்தியத் தரநிர்ணய முகமை (BIS) 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அமலுக்கு வரும் கட்டாயத் தங்கத்திற்கான ஹால்மார்க் தரக்குறியீடு வகைகளின் பட்டியலில் 9 காரட் தங்கத்தைச் சேர்ப்பதாக அறிவித்தது.
- தங்க நகைகள் மற்றும் கலைப் பொருட்களின் நேர்த்தி மற்றும் தரக் குறியிடுதல் ஆகியவற்றிற்கான விவரக் குறிப்புகளை இத்தர நிலை வரையறுக்கிறது.
- இந்தச் சேர்க்கையுடன், தங்கத்திற்கான ஹால்மார்க் தரக் குறியீட்டுத் தரங்களின் பட்டியலில் இப்போது 24KF, 24KS, 23K, 22K, 20K, 18K, 14K மற்றும் இப்போது இணைந்த 9K ஆகியவை அடங்கும்.

| *Grade/Designations* | *Declared Minimum Fineness in ppt* | *Purity in Karat (K) (Approximate)* |
|---|---|---|
| **24 KF** | 999 | — |
| **24 KS** | 995 | — |
| **23 K** | 958 | 23 |
| **22 K** | 916 | 22 |
| **20 K** | 833 | 20 |
| **18 K** | 750 | 18 |
| **14 K** | 585 | 14 |
| **9 K** | 375 | 9 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★